செயற்பொறியாளர்,பொதுப்பணித்துறை,கட்டட (க&ப) கோட்டம், இராமநாதபுரம்
அவர்களின் செயல்முறைஆணை

**முன்னிலை:** பொறி.பெ.செந்தில்குமார்,எம்.இ.,(ஸ்ட்ரக்ட்)
செயற்பொறியாளர்,பொபது.,

செ.மு.ஆ.எண்: **37 / 2020/ இ3 /**நாள்: 13 **.10.2020**

பொருள்: நியமனம் - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமை பணிகளுக்கான தேர்வு தொகுதி-IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பொதுப்பணித்துறையில் இக்கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியமர்வு செய்யப்பட்ட திருமதி.இ.மகேஸ்வரி, இளநிலைஉதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களின் கடித எண்.2496 / PSD-I/ 2020 /நாள் 29.05.2020.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண். எஸ்3(3)/35935/2020/ நாள் 17.09.2020.
3. இக்கோட்ட செயல்முறை ஆணை எண்.37/2020/இ3/நாள்: 22.09.2020.

*****

பார்வை-1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமை பணிகளுக்கான தேர்வு தொகுதி-IVல் இளநிலை உதவியாளராக தேர்வுசெய்யப்பட்டு பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்டு, பார்வை (2)ல் காணும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இக்கோட்டத்திற்கு பணியமர்வு செய்யப்பட்டு, பார்வை-3ல் காணும் இக்கோட்ட செயல்முறை ஆணையின்படி மறுபணியமர்வு செய்யப்பட்டு, 23.09.2020 முற்பகல் முதல் பணியாற்றிவரும் திருமதி.இ.மகேஸ்வரி அவர்களின் பணி, இளநிலைஉதவியாளர் பதவியில், தமிழ்நாடு அரசு சார்நிலைவிதி 23(அ)-ன்படி 23.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடலாகிறது.

--த.பி.பா.--

மேற்கண்ட பணிவரன்முறை செய்த நாள் முதல் தனியரது தகுதிகாண் பருவம் தொடங்கி, தனது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு கால பணிக்காலத்தை முடிக்கவேண்டும் எனவும், இதற்குள் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சிபெறவேண்டும் எனவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் பார்வை-2ல் காணும் செயல்முறை ஆணையின்படி தேர்வு குறித்து சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் தொகுதி-IV தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்யப்படுகிறது.

இப்பணிவரன்முறைஆணை பார்வை-1ல் காணும் தேர்வாணையக் கடிதத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, எதிர்காலத்தில் அரசு வழிகாட்டுதலின்படி மாறுதலுக்கும், திருத்தங்களுக்கும் உட்பட்டது என்ற நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது.

13/10/2020

செயற்பொறியாளர்,பொபது.,
கட்டட (க&ப) கோட்டம்
இராமநாதபுரம்.

13/10/2020

பெறுநர்

திருமதி.இ.மகேஸ்வரி ,
இளநிலைஉதவியாளர்,பொ.ப.து.,
கட்டட(க&ப)கோட்டம்,
இராமநாதபுரம்.

